பதிவு எண்—M 5720. வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

469

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 குருதலம், மாம்பாக்கம் ; விசய, தை; 29—1—54 தனி. 15

குருதலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## தெளிந்து ஒழுகுதல்

வாழ்க்கையில் ஆக்கமும் இழப்பும் அதனால் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருதல் இயல்பாயிருக்கின்றது. ஏன் இப்படி வருகின்றன என்று எண்ணிப் பார்த்து ஒரு முடிபுக்கு வராமலே, பொதுவாக மக்கள், அந்த ஆக்க இழப்புகளுக்கே மேன்மேலும் இரையாகிவிடுகின்றனர்.

காரணம் இல்லாமல் உலகத்தில் எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை, அப்படியிருக்க, ஒருகால் ஆக்கம் வருவதற்கும், மற்றொருகால் இழப்பு உண்டாவதற்கும் ஏதாவது காரணம் இருக்கவே வேண்டுமல்லவா? குழந்தையாகப் பிறந்ததிலிருந்து, அறிவு சரியாக அறியவராத நிலையிலும் இத்தகைய ஆக்க இழப்புகள் உண்டாதலை அங்கங்கும் காண்கின்றோம். அப்படியானால், அவற்றிற்குக் காரணம், பிறக்கு முன்னரே இருந்திருக்கவேண்டும் என்றுதானே துணிய வேண்டும்.

சிலர்க்கு இவ்வுண்மை நெறிகள் தெரிந்திருந்தாலும், உரமான தெளிவு இல்லாததனால், நடக்கையில் நடுவு நிலையாய் நிற்க மாட்டாமை நேர்கின்றது. ஆனால், தெரிந்திருப்பதோடு தெளிந்தாம் ஒழுகவல்லவர் சான்றோர்! நெறி தவறாது, அதாவது நெஞ்சத்துக் கோடாது, அதாவது ஆக்க இழப்புகளைக் கருதாது, நடு நின்று மெய்ந்நெறி கடைப்பிடிக்கும் வல்லமையே, அழகு நடையே சான்றோர்க்கு அணியாவது!

இன்னும் ஒரு வகையாகவும் இதனைக் கருதவேண்டும். கேடு வருவது தீவினையால், ஆக்கம் வருவது நல்வினையால்! இருவினைகளால் இரண்டும் வருகின்றன. வினைகளால் வருவன நிலையில்லாதவை. நல் வினையும் ஒரு வினையாதலால் அதனால் வருவதும் நிலையில்லாததே. ஆகவே தெளிந்தவர்கள் இந்த இருவினை வழிகளில் இருபக்கமாய் ஒழுகாமல், இரண்டுக்கும் நடுவில் அருளில் நிலை நிற்பார்கள்; நடுவு நிற்றலாகிய இந்தத் தெளிந்த ஒழுக்க நிலையை விடச் சான்றோர்க்கு அழகாவது வேறு என்ன இருக்கின்றது!

கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

கேடும் பெருக்கமும் இல்அல்ல—வாழ்க்கையில் இழப்பும் ஆக்கமும் இல்லாதன அல்ல, மாறி மாறி வருவனவேயாம்; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி—ஆதலால், அதற்காக மனத்திற் கோணுதல் கொள்ளாமல் நடுவு நிலைமையில் ஒழுகுதலே சான்றோர்க்கு அழகாகும்.

கோடாமையே எனத் தேற்றேகாரம் விரித்துக் கொள்க.

இல்லல்ல என்றார், கேடும் பெருக்கமும் புதியவை யல்ல, பழவினை காரணமாக முன்னரே அமைந்து கிடந்தன என்றற்கு.

முன்னை நல்வினையாற் கேடும் தீவினையாற் பெருக்கமும் வரும் வினைவை நன்கு தெளிந்திருந்தால், இப்போது மீண்டும் வினைகளைச் செய்து பிறவித் துயரில் வீழாமற் காத்துக்கொள்ளலாமாதலின், நெஞ்சத்துக் கோடாமையை வற்புறுத்தினார்.

கோணித் தேடும் பெருக்கம் ஒரு பெருக்கமாகாது, அது பின்னர்க் கேட்டையே உண்டாக்கு மென்பது கருத்து. வாழ்க்கையைக் கோடாமை அழகு செய்தலின், அதனை 'அணி' என்றார்.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
6-ம் ஆண்டுக் கையொப்பம்
(23-10-53 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—
குருகுலம், பாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | விசய, தை, | தளிர் |
|---|---|---|
| 6 | 29-1-54 வெள்ளி | 15 |

பொங்கலின் பொங்கல்:

# மெய்ந்நூல் விழாக்கள்

செந்தமிழ் மொழியின் மெய்ப் பயனாகிய சிவ நெறித் தொடர்பான பல நூல்களுள் தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகள் புகழ் (தோத்திர) நூல்கள் எனப் பெறும். சிவ ஞான போதம் முதலிய பதினான்கு மெய்கண்ட நூல்கள் பொருள் (சாத்திர) நூல்கள் எனப் பெறும். முன்னவற்றின் ஆசிரியர்களுள் சிவ சமய குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய நால்வர் பெருமக்களும், பின்னவற்றின் ஆசிரியர்களுள் சந்தான குரவர்கள் எனப்பெறும் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாசாரியார் என்னும் நான்கு பேராசிரியர்களும் அடங்கியிருக்கிறார்கள்.

இனி, நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழாரடிகள் காலமுதல் திருமுறைகளுக்கு விழா எடுப்பது என்கின்ற வழக்கம் இன்றுகாறும் இத் தென்றமிழ் நாடெங்கணும் இருந்து வருகின்றது. ஆனால், மெய்கண்ட நூல்களுக்கு அதுபோல் விழா எடுக்கின்ற வழக்கம் இதுகாறும் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. பத்தியுணர்ச்சி குறைந்து ஆராய்ச்சியுணர்வு மிகுந்துள்ள இந் நாட்களுக்கு ஏற்ற ஆக்க விளக்கங்களுடன் (பிரசாரத்துடன்) மெய்கண்ட நூல்களுக்கு விழா எடுப்பது நல்லது எனத் தோற்றுகின்றது.

பொதுவாக, நூல்களுக்கு விழா எடுப்பது என்கின்ற வழக்கமே தமிழ் நாட்டில்தான் இருப்பதாகத் தெரிகின்றது. எழுத்தறிவில்லாதவர் தொகை இங்கு மிகுதியாக இருப்பது இதனால் தெரிகின்றது எனக் கருதுவதில் பயனில்லை. குறையை மூடி என்ன பயன்? இவ் விழாக்கள் இந் நாட்டுக்கு இன்றியமையாதனவே.

திருமுறை விழாக்கள் பொது வாக அன்பியலையும் அருளியலையும் (பத்தியை) அடிப்படையாக வைத்து அவற்றை இன்னிசையோடு ஓதுகின்ற (பாராயணம் செய்கின்ற) திருக்கூட்டங்கள் அணியணியாகப் பின்தொடரச் செய்யப்படுகின்றன. மெய்கண்ட நூல் விழாக்கள் பொதுவாக அறிவியலையும் ஆராய்ச்சியையும் அடிப்படையாக வைத்து ஆக்க விளக்க (பிரசார) முறையில் அவற்றில் தேர்ந்த அறிஞர்கள் அங்கங்கே ஒலிப்பெருக்கியோடு கூடிய வீதிச் சொற்பொழிவுகளை இடையிடையே செய்துவர அந் நூல்களுக்கு மூலமான திருமுறைகளையும் அன்பர்கள் ஓதிக் கொண்டு வருகிற முறையில் நிகழ்த்தப்படலாம்.

திருக்குறளுக்கு விழா பல இடங்களில் நடைபெறுகின்றது. நம் குருகுலத்திலும் நடைபெறுதற்குரியது. அது தமிழ் மறையாதலின், வேத மதிப்புடன் நடைபெறுதல் வேண்டும்.

சங்க நூல் விழாக்கள் மொழியியலையும் நாட்டியலையும் வாழ்க்கையியலையும் அரசியலையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றிற்கேற்ற எழுச்சியுரைகளுடன் நடத்தப்படலாம்.

நிற்க, நம் குருகுலமானது திருக்குறள் வழியில் உலகியலும் அருளியலும் ஆகிய இரு நோக்கமும் உடைய ஒரு சான்றாண்மைச் சீர்திருத்த அறிவியக்கமாக இயங்கிவருதலின், அதிற் சேர்ந்துள்ள அன்பர்கள் சார்பில் இத்தகைய நால்வகை நூல் விழாக்களும் நடைபெறுமாறு செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் அழுத்தமாக இருந்து வருகின்றது.

மற்ற மொழி சமய மக்களுக்குரிய நூல் விழாக்களும் அவற்றிற்குரியோர் பலர் குருகுலத்திற் சேர்ந்து உணர்ச்சி பெறுகிற காலத்தில் அவர்கள் வழி உரிய முறையில் நடைபெற இடம் உண்டு.

திருக்குறள், சங்க நூல் விழாக்கள் எல்லார்க்கும் பொதுவானவை; உலக மேடையாய் அவை நடைபெறுதற்குரியனவே!

இனி, இவற்றுள் திருமுறை விழாவானது அதற்கே உரிய சிறப்பிடம் என்று பலவகையிலும் நிறுவிக் காட்டத்தக்க திருக்கழுக்குன்றத்தில் சென்னைச் சிவ

னடியார் திருக்கூட்டத்தின் சார்பில் சிறப்பாக நடத்தப் பெற்று வருகின்றது.

மெய்கண்ட நூல் விழாவும், சங்கநூல் விழாவும் நடைபெறுதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

மெய்கண்ட நூல்களில் முதலாவதாகப் போற்றப்படுவது சிவஞானபோதம்; சமயாசிரியர்களில் மூன்றாண்டுக் குழந்தைப் பருவத்திலேயே திருவருள் பெற்றுத் தேவாரம் பாடிய ஆளுடைய பிள்ளையாரைப் போல, இரண்டாண்டுப் பருவத்திலேயே திருவருள் பெற்றுச் சிவஞான போதம் செய்தவர் ஆசிரியர் மெய்கண்டார் என்றும், அவர் திருவெண்காட்டீசாரின் திருவருளால் தோன்றியவர் என்றும் அவர் வரலாறு கூறுகிறது.

நம் குருகுலத்தை அடுத்துள்ள மதுராந்தகத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபிரான் திருவெண்காட்டீசுரர் என்று போற்றப்படுகிறார். தென் திருவெண்காட்டீசுரர் நினைவாகவே மதுராந்தகச் சோழன் இத் திருக்கோயிலைத் தன் பெயர் கொண்ட மதுராந்தக நகரத்தில் நிறுவியிருக்கின்றான். ஆகவே அந்தத் திருக்கோயிலின் சார்பில் மதுராந்தகத்தில் மெய்கண்ட நூல்களுக்கு விழா எடுப்பிக்கலாம் என்கின்ற எண்ணம் அரும்பி யிருக்கின்றது. அன்றிக் காஞ்சி மெய்கண்டார் கழகச் சார்பிலும் இதனை இனிது நிகழ்த்தலாம்.

ஏற்றகாலமும், செயல் முறைகளும் இடமும் பற்றிக் கருத்துள்ள அன்பர்களும் அறிஞர்களும் எண்ணித் தெரிவிக்கலாம்.

இனி, சங்கத் தமிழ் நூல்களுக்கு இப்போதைய தமிழகத்தின் தலைநகராகிய சென்னையிலேயே விழா எடுப்பிப்பதும் சிறப்பும் பொருத்தமுமேயாம்.

ஆதலின் சென்னையிலுள்ள பல தமிழ்ச்சங்கங்களின் சார்பில் தமிழர் திருநாளாகிய பொங்கற் றிருநாளில் சங்க நூல் விழாவைச் சிறப்புற நடத்தலாம் என்று தோற்றுகிறது.

இந் நால்வகை நூல் விழாக்களும் முறைபாக ஆண்டுதோறும் சிறப்பாக நாட்டின் தலைமை நிகழ்ச்சிகளாகச் சான்றோர் வாழ் தொண்டை நாட்டில் நடைபெற்று வருமானால், செந் தமிழும் அதன் மெய்ப்பயனாகிய சிவ நெறியும் நல்ல ஆக்க விளக்கத்தை (பிரசாரத்தை) அடைந்து சிறப்புற்று மிளிரும் என்பதில் ஐயமிராது.

குருகுலம், இந் நால்வகை விழாக்களும் நன்கு நடைபெற அவரவரோடும் இயைந்து முயலும் ஊக்கமுடையது.

இவை போன்றவற்றிற் கருத்துடைய நன்மக்கள் மேலும் எண்ணிப் பார்த்து இயன்றன செய்வதும், செய்விப்பதும், செய்வார்க்கு உதவுவதும் மாட்சிமையாகும்.

—தமிழ்ச் சிறுவன்.

## திருமுடி சூட்டிடுவோம்!

(சென்னை அரசவைக் கவிஞர் நாமக்கல்
வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள்)

பண்: தோடி. தாளம்: ஆதி.

(பல்லவி) தலைப்பு

திருமுடி சூட்டிடுவோம்
தெய்வத் தமிழ் மொழிக்கு (திரு)

(துணைப் பல்லவி) தரவு

வருமொழி எவருக்கும் வாரிக் கொடுத்துதவி
வண்மை மிகுந்த தமிழ் உண்மை உலகறிய (திரு)

(சரணங்கள்) தாழிசை

பெற்றவளை இழந்து மற்றவளைத் தொழுத
பேதைமை செய்துவிட்டோம் ஆதலினால் நம் அன்னை
உற்ற அரசிழந்து உரிமை பெருமை குன்றி
உள்ளம் வருந்தினதால் பிள்ளைகள் சீர்குலைந்தோம் (திரு)

அன்னையை மீட்டும் அவள் அரியணை மீதிருத்தி
அகிலம் முழுதும் அவள் மகிமை விளங்கச் செய்வோம்
முன்னைப் பெருமைவந்து இன்னும் புதுமை பெற்று
முத்தமிழ்ச் செல்வியவள் சித்தம் குளிர்ந்திடவே (திரு)

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

## திருதுலச் செய்தி

# மக்கட்பேறு

(அதிகாரச் செய்கை)

விளக்கம்:

நல்ல குழந்தைகளை அடைதற்குரிய திருவுடைமை இதனால் கூறப்பட்டது. குழந்தைகளைப் பெற்று நன்முறையில் வளர்த்தற்குரிய நுண்முறைகளும் இப்பகுதியில் வருகின்றன.

இந்த அதிகாரத்தில் ஏழு குறளில் மக்கள் என்னும் பன்மைப் பெயர் வந்திருக்கின்றது.

நீதிகள்:

1 தம்பொருளென்பர் தம் மக்கள்.

2 மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்.

அறிவுரைகள்:

1 மக்கள் அறிவு அறிந்தவர்களாய் இருக்கவேண்டும்.

2 பழியில்லாதவர்களாயும், பண்புடையவர்களாயும் விளங்க வேண்டும்.

3 மக்கள் கைப்பட்ட உணவு அமிழ்தத்தன்மை அமைந்தது.

4 மக்கள் புலன் இன்பங் கட்கும் விருந்தாவர்.

5 மக்கள் கல்வியில் வல்லவராதல் கடமை.

6 தந்தைக்கு நற்பெயர் எடுத்துத் தாலும் கடமை.

7 உலகோர் 'சான்றோன்' என மதிக்குமாறும், தாய் அது அறிந்து மகிழுமாறும் திகழ வேண்டும்.

8 பெற்றோரைவிடப் பிள்ளைகள் அறிவு வளர்ச்சியில் ஓங்கியவராய் இருத்தல் வேண்டும்.

திருவள்ளுவர் இன்னுரைகள்:

1 மக்களைப் பெறுதலும் ஒரு திருவுடைமை. வாழ்க்கையில் அதற்கு நிகராவது வேறு எதுவுமில்லை மக்கள் அறிவுடைய உயிர்களாதலால் அறிவு விளக்கத்தில் அவர் மேம்பட்டவராய் இருப்பது முதன்மை.

2 அறிவோடு குணமும் மக்களுக்கு வேண்டும். தீயவை தீண்டாமல் இருப்பதற்குக் குணமே முக்கியம். பெற்றோர்க்கும் அதனால் எழுபிறப்பும் தீயவை தீண்டா. குணம் இருந்தாலும் அதனைப் பயன்படுத்தும் நடத்தை முறை நன்றாயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் குணத்திலும் பழி உண்டாகும். நடத்தை முறையைப் பண்பு, பண்புடைமை என்பர். 'பழி பிறங்காப் பண்பு' தீயவை தொடராமைக்கு இன்றியமையாதது.

3 மக்கள் ஒரு சொத்து போலக் கருதப்பெறுவர். அறிவு வாய்ந்த சொத்து அது. அம் மக்களுக்கு மக்களும் தம் சொத்தாகவே பெற்றோர் கருத உரிமையுண்டு. வினைத் தொடர்புகளும், செயல் தொடர்புகளும் உண்டு. அதாவது, பேரன் பேத்திமார்களும் தமக்குச் சொத்தாவர் என்பது.

4 குழந்தைகள் அளைந்து உண்ணும் உணவு, கவடற்ற தன்மை, நடுநிலைத் தன்மை, மென்தன்மை, பற்றற்ற தன்மை முதலிய உயர் பண்புகள் பதியப் பெற்றதாதலால் அமிழ்த ஆற்றல் அதன்கண் உண்டாகின்றது. அதனோடு தன்னை மறந்த பெரும் பண்பு தோய்தலால் அமிழ்த ஆற்றலைவிட மிகவும் மேம்பட்ட தெய்விகத் தன்மையும் அதன்கண் விளைகின்றது. அதனால் மக்கள் சிறுகை அளாவிய கூழ் இறையமுது என்றே மதித்தற்குரியது.

5 உலகத்தில் மென்மையான பண்டங்களும், இன்பமான ஒலிகளும் எவ்வளவோ உள்ளன. என்றாலும், உயிரும் அன்பும் பொருந்திய மென்பண்டமும் இன்னொலியும் குழந்தைகளின் உடம்பும் சொல்லுமே யாம். ஆதலால், மக்கள் மெய் தீண்டலும், அவர் சொல் கேட்டலும் உடலுக்கும் செவிக்கும் இன்றியமையாதன.

6 குழந்தைகளின் மொழி கொச்சை மொழியாக இருந்தாலும், அதனில் அன்பும் தாய்மையும் தேனூறுதலால் யாழும் குழலும்கூட அதன் இனிமைக்கு ஈடாகா.

7. தந்தை தம் மக்களுக்கு முதன்மையாய் உதவவேண்டியது கல்வி வசதியே. அக் கல்வியும் உயர்தரக் கல்வியாய் இருப்பது இன்றியமையாதது. யார் எந்நிலையில் இருந்தாலும் கல்வி மட்டும் யார்க்கும் மறுக்கப்படக் கூடாது. நாட்டிலுள்ள அனைவரும் உயர்தரக் கல்வி பெற்றிருப்பதே தக்கது.

நாடு முழுவதும் கலைஞர் மன்றமாகவே இருக்கவேண்டும். பெற்றோர் தம் மக்களை இந்நிலைமைக்கு உயர்த்தினால் ஒரு தலைமுறையில் நாடு கலைஞர் அவையாய் மாறிவிடும்.

8 ஒவ்வொரு தலைமுறையும் இவ்வாறு மேன்மேல் அறிவு கொண்டு விளங்கினால் அது எல்லார்க்கும் எல்லாச் சிற்றுயிர்களுக்கும் நலந் தருவதாகும். மக்கள் அறிவுடையராய் இருப்பது மக்கள் இனத்தை மட்டும் இனிமை செய்வதற்கு என்று இருத்தல் பரந்த நோக்கமாகாது. மக்கள் அல்லாத ஏழை உயிர்களாகிய எல்லாச் சிற்றுயிர்களுக்கும் அவர் அறிவுடைமை நலந் தருவதாய் இருக்கவேண்டும். மக்கள் சேவையோடு சிற்றுயிர்த் தொண்டும் செய்யவேண்டுவது அறிவுடை மக்களின் கடமையாகும்.

9 தாய் குழந்தையைப் பெற்றெடுக்கும்பொழுது, அது ஓரளவு அறிவும் குணமும் உடையதாய் இருந்திருக்கும். பிறவிக்கு அது வந்ததே அவற்றைப் பெருக்கிச் சான்றோராய் உயர்வதற்கேயாகும். பெற்றெடுத்த காலத்தை விடக் குழந்தை வளர்ந்து பிறவியின் நோக்கமாகிய சான்றாண்மையை அடைகின்றபொழுது தாய் அடையும் மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. பெற்றோர் இருவரில் குழந்தையின் குணமும் புகழும் கண்டு பெரிதும் மகிழ்பவர் தாயேயாம்.

10 அறியாக் காலத்தில் கல்வி முதலியன தந்து தன்னைக் கலைஞனாகவும், குணம் தந்து சான்றோனாகவும், உயர்த்திய பெற்றோர்க்கு, மக்கள் தம் காலத்தில் தம் நடத்தையால் பேரும் புகழும் பெருக்கித் தர வேண்டியது கடமையாம். நன்றி மறவாப் பெரும்பண்பும் இதனால் வளரும்.

11 நல்ல குழந்தைகளைப் பெறுவதற்குப் பெற்றோர் தவம் புரிதல் வேண்டும். தவமும் உயர்வுடையதாய் இருக்கவேண்டும். இன்னதற்காக இன்ன வகையான தவம் இக் குழந்தை பெறுவதற்காக இவர் இயற்றினர் என்று பயன் கருதியதாக இருத்தல் ஆகாது. யார்க்கும் தெரிதலும் ஆகாது. குழந்தையின் மேம்பட்ட நிலைமைகளால் பெற்றோரின் தவம் பலராலும் ஊகித்தறியுமாறு அமைய வேண்டும். இக் குழந்தையின் தந்தை என்ன தவம் இயற்றினரோ என்னும் நற்பெயரைப் பெற்றோர்க்கு உண்டாக்கும்படி பிள்ளைகளின் செயல்கள் திகழ வேண்டும். மக்கள் பெற்றோர்க்கு ஆற்றும் நன்றி இது.

12 வயது மூத்த தள்ளாமைக் காலத்தில் அவர்கள் வசதிகளுக்கு ஆவன செய்து பாதுகாத்து வருதல் என்பது, பெற்றோர்க்குப் பிள்ளைகள் செய்ய வேண்டிய கட்டாய உதவியேயானாலும், அதனோடு மட்டுமில்லாமல் தம்முடைய கல்வி, அறிவு, ஒழுக்கம், தொண்டு முதலிய நன்னலங்களால் பெற்றோர்க்கு நற்பெயர் எடுத்துக் கொடுத்தல் பின்னும் முக்கியமானது.

13 பிள்ளையின் புகழ் கண்டு தந்தை மகிழ்வார். பிள்ளையின் குணம் கண்டு தாய் மகிழ்வார். இவ்வியல்பு அறிந்து மக்கள் நடந்துகொள்ளுதற்குரியர், அப்படி நடத்தல் அவர்கள் நல்லாற்றனுக்கு அடையாளமாகும்.

செய்கைகள்:

1 குருகுலத்தில் இவ்வதிகாரச் செய்கைக்கு ஓர் ஏக்கர் நிலமுண்டு. அதனில் அமைக்கும் செடி கொடிகளையும் வளர்க்கும் சிற்றுயிர்களையும் மக்களைப் போலவே கருதி அருமை பாராட்டவேண்டும்.

2 அங்கே குருகுலப் பிள்ளைகள் சிலரைத் தம் மக்களைப் போலவே உரிமை பாராட்டி இருத்தி வளர்த்து வரவேண்டும்.

3 குருகுலத்தின் ஏனைப் பிள்ளைகளையும் அவ்வதிகாரக் காட்சியைக் காணவரும் மற்றப் பிள்ளைகளையும் தமக்கு 'மக்கட்பேறு' என்றே கருதி அளாவி வரவேண்டும்.

4 இவ்வதிகாரத்தின் சார்பில் 'குழந்தைகள் இயக்கம்' என ஓர் இயக்கம் அழகாக நடைபெற வேண்டும்.

5 அறிவுள்ள குழந்தைகள், குணமுள்ள குழந்தைகள், நடத்தையாற்றலுள்ள குழந்தைகள், உடல் நலமுள்ள குழந்தைகள், பெரும்போக்குள்ள குழந்தைகள், தலைமைச் சிறப்புள்ள குழந்தைகள், பலதிறமான கலைத்திறம் செயல் திறம் படைத்த குழந்தைகள், கருவில் திருவுடைய குழந்தைகள், வளர்ப்பில் திருந்திவரும் குழந்தைகள், சிறுமுதுக் குழந்தைகள் முதலிய பல்வகைப் பிரிவில் இயக்கங்கள் நடத்தலாம். அவ்வப் பிரிவுக்குரிய குழந்தைகளின் குழந்தைப் படங்களை, அவை வளர்ந்து வரும் நிலையில் வயதுதோறும் காணும் படங்களை, இயன்ற அளவுக்குக் குருகுலத்தில் காட்சியாக அமைக்கலாம்.

6 குழந்தைகளின் இயல்புகள், அவற்றை வளர்க்கும் முறைகள், அவற்றிற்கு வேண்டும் சூழல்கள், கருவிகள், தொடர்புகள் முதலியவை பற்றித் தக்க விளக்கங்கள் தந்து பெரிய அளவில் நாட்டில் இயக்கங்கள் கிளர்ச்சிகள் நடத்த வேண்டும்.

7 குருகுலத்தின் இவ்வதிகார நிலப் பகுதியில் குழந்தை வளர்ப்பு நிலையம் ஒன்று மாதிரிக்காக நடத்திக் காட்டவேண்டும்.

8 வரலாற்று முறையில் நற்குழந்தைகள் தோன்றிய குடும்பங்களின் நிலைமை, பெற்றோர்களின் நிலைமை முதலியவற்றின் விளக்கமும்; அக் குழந்தைகளின் பல்வகைப் பருவ நிலைகளில் விளங்கும் குறிகளின் விளக்கமும்; இறுதியில் சிறந்து தோன்றும் அமைப்பின் விளக்கமும்; இயன்றால் உருவப்படங்களுடன் தொகுத்து வருதல் வேண்டும்.

9 மக்களுக்காகத் தன்னலமிழந்த 'தியாகி'களாய் நடக்கும் பிள்ளைகளையும் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை அடிக்கடி வெளியிட்டு வருதல் வேண்டும்.

10 மக்களிடத்துத் தாய்தந்தை உணர்ச்சி எப்படி இருக்கும், எப்படி இருக்கவேண்டும் என்ப

தற்கும்; தாய் தந்தையரிடத்து மக்கள் உணர்ச்சி எப்படி இருக்கும், எப்படி இருக்கவேண்டும் என்பதற்கும் வரலாற்றில் உண்டான வாய்ப்புகளையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்து எடுத்துக் காட்டலாம்.

11 அதிகாரத்தின் ஒவ்வொரு குறளுக்கும் இலக்கான நல்ல கதைகள் நாடகங்கள் படைத்து வெளியிட்டு வரலாம்.

12 குழந்தைகள் இயக்கம் எதிர்காலத் தலைமுறை இடக்கமாதலால், தமிழ் நாட்டின் நலத்துக்குப் பாடுபடுவோர் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இவ்வியக்கத்தின் கிளை அமைப்புகள் நிறுவித், தொண்டு செய்யுமாறு வழி வகைகள் காணலாம்; கண்டு தொடர்பு கொண்டு உழைத்து வரலாம். அவற்றிற்குரிய அலுவலகம் ஒன்றும் குருகுலத்தின் இவ்வதிகாரப் பகுதியில் அமைந்து இயங்கி வரவேண்டும்.

13 மேலே காட்டிய பல்வகைக் குழந்தைப் பிரிவிற்கும் நல்லியக்கமாய் உள்ள குழந்தைகளின் காட்சி மாநாடு, இயக்க மாநாடு, கண்காட்சிச்சாலை முதலியன நடத்திப் பரிசளித்தல் முதலியவற்றால் ஊக்கமளிக்கலாம்.

14 குழந்தைகளின் கலை மன்றம், ஆட்சி அவை, தொண்டு நிலையம் முதலியனகோலிக் குழந்தைகளைச் செயற்படுத்தலாம்.

15 மக்களினமே அல்லாமல், மற்றச் சிற்றுயிர்களின் இனமும், செடி கொடிகளின் இனமும் குழந்தைகளால் மேம்படுமாறு குழந்தைகளுக்கு ஒரு பழக்க நிலையம் அமைக்கலாம்.

16 தற்காலத்தில் நற்குழந்தைகளை ஈன்று, தம் இல்லங்களையே நல்ல பழக்க நிலையமாகக் கொண்டு அவர்களை நன்முறையில் வளர்த்து வரும் தமிழ் நாட்டுக் குடும்பங்களை மேன்மேலும் ஊக்கிச் சிறப்பிக்க வேண்டும். தேவையான உதவிகளைச் செய்விக்கவும் முயன்று வரவேண்டும்.

17 தக்க மக்களை அவற்றின் பெருமையைப் பாராட்டிப் பேசி உயர்த்தினால், 'சான்றோன் எனக் கேட்டதாய்' பெரிது உவப்பாளாதலாலும்; 'என் நோற்றான்கொல்' எனும் சொல் தந்தைக்கு ஆற்றும் உதவியாய் இருத்தலாலும் நாட்டில் உள்ளோர் ஆற்றலை அறிந்து இவ்வாறு பாராட்டி வருதலை ஒரு கடமைச் செயலாக மேற்கொள்ளவேண்டுவது இன்றியமையாதது. இதற்காக, நாட்டில் நன்முறையில் விளங்கி வரும் அடுத்த தலைமுறைச் சுடர்களைப் பற்றிய பட்டியல் புள்ளிக் கணக்கு தொகுத்து வரவேண்டும்.

18 இத்தகைய குழந்தை இயக்க ஆதரவுச் செய்கைகளைக் குருகுலத்தார் குடும்பங்களின் பொருட்டு மிகச் சிறப்பாகவும், தமிழகத்தின் குடும்பங்களின் பொருட்டுச் சிறப்பாகவும், ஏனை நாடுகளின் நற்குடும்பங்கள் பொருட்டுப் பொதுவாகவும் செய்து வரல் வேண்டும்.

19 அனைத்துலகக் குழந்தை அமைப்புகள், இந்தியக் குழந்தை அமைப்புகள், தமிழகக் குழந்தை அமைப்புகள் முதலியவற்றோடு தொடர்பு கொண்டு அவ்வவற்றின் நிகழ்ச்சிகளில் சிறப்பாய்க் கலந்து பாவலாய்ச் செயல் புரிந்து வரவேண்டும்.

20 குருகுலத்தார் மக்கள் அமைப்பு ஒன்று காணலும், பிற மக்கள் அமைப்புகளுடன் தொடர்பு படுத்தலும் வேண்டும்.

21 குழந்தை வெளியீடுகள், குழந்தை இதழ்கள், குழந்தை விளையாட்டுக் கருவிகள், குழந்தைகளால் செய்யப்படும் தொழிற்சாலைகள் முதலிய பல்வகை அமைப்புகளும் இவ்வதிகாரத்தின் குருகுல நிலப்பகுதியில் அமைக்கலாம்.

22 திருவள்ளுவர் ஆண் பெண் குழந்தைகளின் வளர்ச்சியில் பெரிய வேறுபாடு காட்டாமையால், பெண் குழந்தைகளின் வளர்ச்சியில் நாட்டவர் சிலர்க்கு இருக்கும் இழிந்த மனப்பான்மையை விலக்க முயல வேண்டும். எண்ணிக்கையில் சமபாகமாக ஆண் பெண் பிறவிகள் இருத்தலால், நாட்டின்பாதி நலம் பெண் மக்களால் விளைய இருக்கின்றது என்னும் உண்மையை அறிந்து, அப் பாதிப் பிரிவினரை நன்கு வளர்க்கவேண்டும். தனிப்பட்ட முயற்சிகள் எடுக்க ஊக்கங் கொள்ளவேண்டும். தனிப்பட்ட

**Phone. 55034. Tel. Enkayam**

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்




**பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பயிற்சி நிலையங்களும் அமைத்து வரவேண்டும்.

23 ஆசிரியர் இவ்வதிகாரத்தில் குழந்தைகளின் அறிவு நிலை, குண நிலை, நடத்தைநிலை, ஒரு பேருப் உதவும் நிலை, களங்கமற்ற நிலை, தெய்விக நிலை, இனிமை நிலை, கல்வி நிலை, ஒப்புரவு நிலை, தொண்டு நிலை, உயர்வு நிலை, நன்றி நிலை முதலிய பல்வகை நிலைமைகளையும் பாகுபடுத்திப் பேசுதலாலும், அவற்றையெல்லாம் குழந்தைகள் திருந்தும் முறையில் வைத்துச் சீர்திருத்தங்களாகக் காட்டுதலாலும், அவ்வப் பிரிவுக்கும் ஏற்றபடி சிறந்த சீர்திருத்த வெளியீடுகளை அவ்வப்போதும் வெளியிட்டு வருதலும், இயக்கிவருதலும் கடடாயமாகும்.

24 பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்குப் பெற்றோர்களின் வினைகளையும், தற்காலப் பழக்க வழக்கங்களையும் காரணமாகக் காட்டி அவர்கள்மேல் பெரும் பொறுப்பை ஏற்றுதலால், பெற்றோர்க்குச் சிறந்த அறிவுரை வெளியீடுகளையும் வெளியிட்டு இயக்கி வருதல் வேண்டும்.

25 நாட்டின் தற்காலக் கல்வி நிலையங்கள் குழந்தைகளைப் பயிற்றும் செயலகங்களாய் இருத்தலால், அவற்றின் நல்வளர்ச்சியில் அக்கறை காட்டவேண்டும். கல்வித் துறையில் அறிவோடு குணச் சிறப்பும் மிகுமாறு கல்வித்துறை அதிகாரிகளோடும், சட்டசபை உறுப்பினர்களோடும், அமைச்சர்களோடும் தக்கபடி தொடர்பு கொண்டு நன்முறையில் அத்துறை இயங்குமாறு செய்வித்தல் வேண்டும்.

26 திறமான நன்மக்களை நாட்டின் பெருமைக்கு, பாதுகாப்புக்கு, வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டு! ஆதலால் 'மக்கட்பேறு' என்னும் இவ்வதிகாரத்தில் குழந்தைகளின் எண்ணிக்கை பற்றியோ, பால் வேறுபாடு பற்றியோ, சொத்து முதலியவைபற்றியோ ஆசிரியர்எதும் பேசாமல் குழந்தைகளின் அறிவு, குணம், நடத்தை, ஆற்றல், நேர்மை, இனிமை, கல்வி, செய்கை முதலிய திறமைகளைப் பற்றியே முற்றும் பேசுதலால், இத்தகைய உரமுடைய நன்மக்களாகக் குழந்தைகளைத் திருத்தி வளர்த்துச், சிறந்த உணர்வுப் பிழம்புகளாகத் திகழ வைத்து நாட்டின் வருங்கால நற்கன்றுகளாக்கி நாட்டை மேம்படுத்த வேண்டி இருத்தல் முதன்மையாகின்றது. ஆதலின், இக்காலப் பாடசாலையின் நன்மையே பிற்கால நாட்டின் பெருமை என்றுணர்ந்து கல்வி நலத்தில் முதல் ஊக்கம் கொள்ளுமாறு இயக்கத் தலைவரையும் அரசினரையும் ஊக்குதல் வேண்டும். முதியோர் இயக்கத்தினும் இது மேம்பாடுடையது.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டும்; அதுவரைவள்ளுவரும்வாசுகியும் போல் வாழலாம், என்றான். பாண்டியன் சந்திரா இருவருஞ் சேர்ந்து.

கொள்ளேன் புரந்தான்
மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொ
டல்லால்நாகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே
இருக்கப்பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம்
உன்னையல்லால் எங்களுத்தமனே

என இறைவனைப் பாடிப் பாவினர்கள்.

# சோழநாட்டுத் திருப்பயணம்

பாடல் பெற்ற சோழநாட்டுத் திருவூர்களில் காவிரிக்கு வடகரையிலுள்ள திருவூர்களை எல்லாம், வருகின்ற “செய” ஆண்டு ஆனிமாதத் திருக்கழுக்குன்றத் திருமுறைப் பெருவிழாவுக்கு முன், வைகாசி மாதத்தில் ஆசிரியர் அவர்களோடு அன்பர்கள் திருக்கூட்டமாகச் சென்று வழிபடுவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

தொண்ட நாட்டு நடு நாட்டுத் திருப்பயண விவரங்களை அறிந்த அன்பர்கள், சோழ நாட்டுத் திருப்பயணத்தைப் பின்னும் சிறப்புடனும், தகுந்த முன்னேற்பாடுகளுடனும் செய்தால் நன்றாக இருக்கும், சமயத்துக்கும் நல்ல ஆக்க விளக்கம் (பிரசாரம்) உண்டாகும் என்று தெரிவிக்கின்றார்கள்.

எனவே இதுபற்றிய தம் கருத்துக்களை அன்பர்கள் அடியேனிடம் நேரிலும் எழுத்து மூலமும் தெரிவிக்கலாம் என்றும், இத் திருப்பயணத்தில் கலந்து கொள்ளும் விருப்பம் உள்ளவர்கள், (திரு. ப. வேதாசலம், மதராஸ் எலக்ட்ரிகல்ஸ், 55-57 நட்டன் பசார், சென்னை 3. என்பவரிடம்) அதன் முன்னேற்பாடுகளுக்குமட்டும் ரூபா ஒன்று கொடுத்து, தம் பெயர்களை முன்னதாகவே பதிவுசெய்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகின்றேன்.

ந ரா. ஆடலரசு,
செய்தியாளன்.

# முப்பதாம் ஆண்டில்

(வெ. சா. வ.)

(முன் தொடர்ச்சி)

அந்தக் கேள்வி முடிவதற்குள் பட்டினத்தாரைப் பார்த்தான், இராமலிங்கரைக் கண்டான், மற்றும் காடு, மலை ஆறு யாவற்றையும் கண் மூடித் திறப்பதற்குள் கண்டு விட்டான். பாண்டியனின் மலர்ந்த முகம் திடீரெனக் கூம்பி விட்டதைக் கண்ட சந்திரா (கணவனை நோக்கி 'ஏன் இவ்வளவு திகைப்பு?' என்று ஈனக் குரலில் கேட்டாள்.

பாண்டியன் 'முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒரு பொருளைத் தப்பாமற் றன்னுள் பெறானபின் என்ன....' என்று நீட்டினான். சந்திரா இடையிட்டுப் பெறானபின் என்ன என்று படீரெனக் கேட்டாள். பாண்டியன் 'வாழ்வு செப்புங் கலையளவே யாகுமாம்'' என்று பதிலிறுத்தான்.

சந்திரா, அப்படியாயின் அம்மூன்றும் எவை? என்றாள். பாண்டியன் 'அறம், பொருள், இன்பம் மூன்று' என்றான். சந்திரா, அறமாவது யாது? என்றாள். பாண்டியன் 'ஈதல் அறம்' என்றான். சந்திரா பொருள் என்பதோ? 'பாண்டியன் 'தீவினை விட்டு ஈட்டல்' மூன்றாவதும் தெரிய வேண்டியது தானே! அது-'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' சந்திரா, 'சரி' நம் வாழ்வில் இன்பமில்லையா? என்றாள். பாண்டியன், 'உன்னைப் போன்றாரைப் பெற்றோர்க்கு நரகமே சொர்க்கமாகத் தோன்றுமே' [illegible].

சந்திரா, [illegible] என்? வேறொரு இன்பத்தை [illegible] காடும் மேடுந் திரியச் சந்நியாசங் கொள்ள வேண்டும்'! என்றாள்.

பாண்டியன், 'இது சிற்றின்பம் அது பேரின்பம்; இதையடைய முன் சொன்ன மூன்றையும் விட வேண்டும்' என்றான். சந்திரா, 'இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவனென்பான் முயல்வாருளெல்லாந் தலை' என்று வள்ளுவர் கூறியிருக்கின்றாரே' என்றாள்.

பாண்டியன், 'இல்லந் துறந்தோன் பெருமை கோடி மடங்கு அதனினும் பெரி' தெனப் பட்டினத்தாரும், 'துறந்தார் பெருமை இத்துணைத் தென்று கூற இயலா' தென வள்ளுவருங் கூறியிருத்தலினால்தான், என்றான். சந்திரா மேலுங் கேட்க வாயெழாதவளாய் மௌனியானாள். பாண்டியன், 'பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன் தன்னை நாடுவன் தன்னந் தனியனே' என்று பாடினான்: அதைக் கேட்ட சந்திரா, கண்களில் நீர் கலங்கப் '*பொன்னை மாதரைப் பூமியை நோவதேன்?' என்ற ஒரு குறுக்குக் கேள்வியைக் கேட்டாள். மேலும்பேரின்பத்தை நீங்கள் மாத்திரந்தான் துய்க்கவேண்டுமா? எங்களுக்கு இல்லையா? நாங்கள் யாரை வெறுப்பது? நாங்கள் எங்கே போவது? போன்ற சரமாரியான கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள்.

பாண்டியன் பொறுமையாக அவ்வாறு உங்களைப் பற்றி யாருங் கூறியிருப்பதாக எனக்குத் தெரியவில்லையே. இராமலிங்கரும் "மருவு பெண்ணாசையை மறக்கவேவேண்டும்" என்று ஆண்களுக்குத்தானே கூறியிருக்கின்றார் என்றான். சந்திரா (தனக்குள்ளாகவே) இராமலிங்கருமா? அப்படியாயின், நான் எவ்வாறு அப் பாடலைப் பாடுவேன்? ஆண்டவனை நான் எவ்வாறு வேண்டுவேன்? என்று எண்ணியவளாய் சட்டென்று அவன் பக்கமாக முகத்தைத் திருப்பி 'அப்படியன்று' என்றாள்.

பாண்டியன் ''பின் எப்படித் தான்'? என்றான். சந்திரா, மருவு பெண், ஆசையை மறக்கவே வேண்டும்' என்று பிரித்தும் பொருள் கொள்ளவேண்டும் என்றாள்.

பாண்டியன் (ஆச்சரியத்தோடு, 'ஆ! இதுவரை எனக்கு இப்பொருள் விளங்கவில்லையே (தலையசைத்துக் கொண்டே) அப்படியாயின் அது உனக்கும் பொருந்தும்' என்றான்

சந்திரா, 'இப்பொழுதே மேற்கொள்ளலாமல்லவா?' என்றாள். பாண்டியன் 'மூத்தோர் சொல் வார்த்தை அமுதம்' ஆதலின் 'நீ உன் முப்பதில்தான் மேற்கொள்ளவேண்டும்' என்றான்.

சந்திரா ''எனக்கு இன்னும் முப்பது வயதாகவில்லையே, அதுவரை யான் இவ்வில்லற இன்பத்திலே தான் இருக்கவேண்டுமோ? என்றாள். பாண்டியன் 'ஆம்' என்றான்.

சந்திரா 'தங்களைப் பிரிந்து அது எவ்வாறு கூடும்?' என்றாள் பாண்டியன் 'ஓ' சாவித்திரியைப்போல் சரியாக மடக்கி விட்டாய், உணர்ந்தேன், உணர்ந்தேன். உனக்கும் முப்பது ஆகட்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

* அநுபவாநந்த தீபிகையில் உள்ளது.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)